பக்கங்கள்: 08
# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 31 வியாழக்கிழமை 16.09.2021 கதிர் 179

## மேலுமொரு மருத்துவர் கொரோனாவால் சாவு!

கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் பணியாற்றிய மருத்துவர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

கட்டுகஸ்தோட்டை - மாவில்மட பகுதியில் வசிக்கும் மருத்துவர் ஜைத் ரஃபைதீன் என்பவரே உயிரிழந்துள்ளார். ☞2

## கைதியின் தலையில் கைத்துப்பாக்கி; லொஹான் செய்தது பாரிய வன்முறை

### பொன்சேகா எம்.பி. கடும் சீற்றம்



ஒரு நபருக்கு தற்காப்புக்காக மட்டுமே கைத்துப்பாக்கி வழங்கப்படுகின்றது. இந்நிலையில், அப்பாவி கைதியின் தலையில் கைத்துப்பாக்கி வைக்கப்பட்டால் அது பாரதூரமானது. அது ஒரு வன்முறைச் செயல். இந்தச் செயலில் ஈடுபட்ட லொஹான் ரத்தவத்தவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். ☞2

## லொஹானுக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு



அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளை ஆயுதமுனையில் அச்சுறுத்தினார் என்று முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில், சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்த லொஹான் ரத்வத்தவுக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. ☞2

### சர்வதேச போர்க்குற்ற விசாரணையில்

# புலிகளுக்கு எதிராக எம்மைத் தூண்டிவிட சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் முயற்சி!

### யாழில் சித்தார்த்தன் பகிரங்கக் குற்றச்சாட்டு



**(இ.கலையமுதன்)**

**சர்வதேச போர்க்குற்ற விசாரணையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் சாட்சியமளிக்க எங்களைத் தூண்டிவிட சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் முயற்சிக்கிறார்களோ என்ற சந்தேகமும் எனக்குண்டு.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்)** ☞2

## கிளைமோர் உள்ளிட்ட வெடிபொருள்கள் மீட்பு

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்., தென்மராட்சி, வரணி, குடமியன் பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் இருந்து, அதிசக்தி வாய்ந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த ☞2

## மேலும் 965 பேர் கைது

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 965 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 89 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட ☞2

## காங்கேசன்துறை வீதியோரம் வீழ்ந்து கிடந்தவர் உயிரிழப்பு

### கொலை என உறவினர்கள் தெரிவிப்பு தொடர்கின்றது பொலிஸ் விசாரணை

(ந.லோகதயாளன்)

காங்கேசன்துறை பிரதான வீதியில் இன்று சுயநினைவற்று வீழ்ந்து கிடந்த இளம் குடும்பஸ்தர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். அவரது தலையில் காயம் காணப்படுகின்றது எனப் பொலிஸார் கூறினர்.

அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும், ☞2

## பத்தனை ஆற்றிலிருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

### பலகோணங்களில் விசாரணை



திம்புள்ளை - பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தனை ஆற்றிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். ☞2

## மட்டக்களப்பைச் சேர்ந்த குடும்பம் தமிழகத்தில் இன்று காலை கைது

### சட்டவிரோதமாக கடந்த மாதம் படகில் சென்றவர்கள்



(ந.லோகதயாளன்)

இலங்கையைச் சேர்ந்த நால்வர் இன்று காலை இந்தியாவின் தமிழகத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இரு ஆண்களும், இரு பெண்களுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த குறித்த நால்வரும் கடந்த ஆகஸ்ட் மாதம் 8ஆம் திகதி இந்தியாவுக்குப் படகில் சென்று தனுஸ்கோடி பகுதியில் இறங்கி அங்கிருந்து சென் ☞2

## புலிகளுக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி. தெரிவித்தார்.

எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. போன்றவர்கள் அண்மைக்காலமாக வெளியிட்டு வந்த கருத்துக்கள் தொடர்பான தெளிவுபடுத்தல்களை வழங்கியபோதே, இந்த யதார்த்தங்களை அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் இன்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு தமிழ்த் தரப்புக்கள் 3 கடிதங்கள் அனுப்பியுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் 5 கட்சிகள் கையெழுத்திட்டு ஒரு கடிதம் அனுப்பினோம். இரா. சம்பந்தன் ஒரு கடிதம் அனுப்பினார். இன்னொரு கடிதமும் அனுப்பப்பட்டது.

நாம் அனுப்பிய கடிதத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமைக்குமிடையில் சம்பந்தமில்லை. இரா.சம்பந்தன் அதைக் கூறியுள்ளார். மற்றைய கட்சிகளின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதனும், நானும் அதையே கூறியிருந்தோம்.

ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் ஆவேசத்திற்குத்தான் என்ன காரணமென்பது தெரியவில்லை.

அவர் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர் சந்திப்பை நடத்தி ஆவேசமாகப் பேசியிருந்தார். இரா.சம்பந்தன் கடிதம் எழுதுவதைத் தெரிந்துகொண்டு, அதை மீறி நாம் கையெழுத்திட்டதாகவும் கூறியிருந்தார்.

ஆனால், உண்மையில் அப்படி நடக்கவில்லை. நாங்கள் கையெழுத்திட வேண்டிய ஒரு கடிதமெனில், அதை எழுதத் தொடங்கும்போதே இரா.சம்பந்தன் எமக்குத் தகவல் தந்து விடுவார். ஆனால், இந்தக் கடித விவகாரத்தில் கடைசி வரை எனக்கு ஒரு தகவலும் தரப்படவில்லை.

எம்மைத் துரோகிகள், காட்டிக் கொடுத்தவர்கள் என்றும் சுமந்திரன் கூறியிருந்தார். தமிழரசுக் கட்சியினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் தேர்தல் காலத்தில் மேடை போட்டு இவற்றைத்தான் கதைத்துக் கொண்டிருப்பார்கள். எனக்கு மக்கள் மத்தியிலிருந்த மதிப்பையும், செல்வாக்கையும் குழப்ப அதை செய்தார்கள் என்பது நன்றாகத் தெரியும். அது பலனளிக்காது என்பதை தெரிந்ததால் நான் அதைக் கண்டுகொள்ளாமல் விட்டு விட்டேன்.

ஆனால், இப்போதும் சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் மீண்டும் புலிகளின் போர்க்குற்றம் பற்றியும், புளொட் அமைப்பும் விசாரிக்கப்பட வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள்.

சுமந்திரன் தயாரித்த கடிதத்தில், தருஸ்மன் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட புலிகளும் போர்க்குற்றத்தில் ஈடுபட்ட பகுதி இணைக்கப்பட்டுள்ளது. அது அவர்களின் நிலைப்பாடு. அது வேறு விடயம். ஆனால், நாங்கள் தமிழ்த் தரப்பாக இருந்து கொண்டு, நாங்களே எங்களை விசாரிக்கக் கோருவது எவ்வளவு புத்திசாலித்தனம் எனத் தெரியவில்லை.

அடுத்தது, நாங்களே விசாரிக்கக் கோருவது, நாங்கள் ஏதோ பெரிய குற்றம் செய்து விட்டோம் என நாங்களே ஒத்துக் கொள்வதைப் போல் அமையும்.

எல்லா இயக்கங்களிற்கிடையிலும் ஒருவருக்கொருவர் பல பிரச்சினைகள் இருந்தன. மோதல்களும் நடந்தன. அது உண்மை. அதற்காக எந்தச் சந்தர்ப்பத்திலும், புலிகளை விசாரியுங்கள் எனக் கூறத் யாராக இல்லை. எங்களை விசாரிப்பதென ஒரு நிலை வந்தால், அதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். ஒரு சர்வதேச விசாரணை நடத்த நாம் தயாராக இருக்கின்றோம். அப்படியொன்று நடந்தால்தான், நாம் எந்தவிதக் குற்றங்களும் செய்யவில்லையென்பதை நிரூபிக்க முடியும்.

நாம் சர்வதேச விசாரணையைக் கோரமாட்டோம் எனசுமந்திரன் கூறியிருந்தார். அவருக்குத் தெரியாது, நாம் ஏற்கனவே பலமுறை அதை கோரி விட்டோம்.

1994களின் பின் பேசும்போது, பல முறை கூறியிருக்கிறேன் - விடுதலைப் புலிகளுடன் எமக்குப் பிரச்சினைகள் இருந்தாலும், பேச்சு என்று வந்தால், அரசு, விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டுமெனக் கூறியிருந்தேன். ஏனெனில், அவர்கள் இல்லாத தீர்வு முழுமையடையாது. எங்களுடன் பேசாவிட்டாலும், புலிகளுடன் பேசி ஒரு தீர்வை நடைமுறைப்படுத்தினால் எமக்கும் அதில் பிரச்சினையிராது என கூறியிருந்தேன். ஏனெனில், புலிகள் மிகப்பெரியளவிலான அதிகார பரவலாக்கலையே கோருவார்கள்.

சுமந்திரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கூறியிருக்கிறார்கள், கே.பி, கருணா, பிள்ளையான் போல் புளொட்டையும் விசாரிக்க வேண்டும் என்று.

கே.பி, கருணா, பிள்ளையான் ஆகியோர் விடுதலைப் புலிகளை விட்டு வெளியேறிய பின்னர் நடந்தவற்றுக்கு இவர்கள் விசாரணை கோரவில்லை. அவர்கள் புலிகள் அமைப்பில் இருந்தபோது செயற்பட்டமைக்கே இப்போது இருவரும் விசாரணை கோருகிறார்கள்.

கே.பி. யுத்தம் முடிந்த பின்னர் கைது செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டவர். அவர் அதன் பின்னர் இலங்கையில் கிட்டத்தட்ட வீட்டுக்காவலில் இருக்கின்றார். அவருக்கு பாதுகாப்பாக 10-15 இராணுவச்சிப்பாய்கள் உள்ளனர். அவரை விசாரிப்பதெனில் முழுக்க முழுக்க அவர் விடுதலைப் புலிகள் காலத்தில் செயற்பட்டமைக்காகவே விசாரிக்க வேண்டும்.

இதில் இன்னொரு விடயமுள்ளது. அவரை விசாரிப்பதெனில், அவருடன் செயற்பட்ட ஏராளம் புலம்பெயர் தமிழர்கள் உள்ளனர். இந்த விசாரணை வலைப் பின்னல் பெரிதாகிக் கொண்டே போகும். இது அரசின் நிகழ்ச்சி நிரல். அரசின் நிலைப்பாட்டை ஒத்ததாகவே இவர்களின் கோரிக்கை உள்ளது.

சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் கூறியதற்குப் பின்னர், இப்போழுது வாசுதேவவும், புலிகள் மீது விசாரணை நடத்த வேண்டும் எனக் கூறியுள்ளார்.

போர் முடிந்த பின்னர் இரா.சம்பந்தன் இரண்டு விடயங்கள் சொல்லியிருக்கிறார். முதலாவது, மஹிந்த ராஜபக்ஷவை நாடாளுமன்றத்தில் வைத்து பாராட்டினார். பயங்கரவாதத்தை நீங்கள் கட்டுப்படுத்தி மக்களை விடுவித்திருக்கிறீர்கள் நன்றி என்று சம்பந்தன் அப்போது கூற சிங்கள எம்.பிக்கள் மேசையில் தட்டி வாழ்த்து தெரிவித்தனர். இதை சம்பந்தன் மேல் குற்றம் சொல்வதற்காக சொல்லவில்லை. இவையெல்லாம் 2010ஆம் ஆண்டுக்கு முன்னர் நடந்த விடயங்கள். சுமந்திரன் அரசியலுக்கு வருவதற்கு முன்னர் நடந்தவை. அவருக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

அவர் 2010 இற்கு முன்னர் நடந்தவற்றை சுமந்திரன் பேசுவது பிரச்சினையில்லை. அவற்றைப் படித்து, அறிந்து விட்டு பேசுவதே நல்லது.

சர்வதேச போர்க்குற்ற விசாரணையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் சாட்சியமளிக்க எம்மைத் தூண்டி விடுவதற்கே இந்த குற்றச்சாட்டுக்களை இவர்கள் தெரிவிக்கின்றார்கள். நாம் இதற்கு சரியாக பதில் சொல்ல முயன்றால், அந்தப் பதில்கள் எமக்கு எதிராக மட்டுமல்ல, புலிகளுக்கு எதிராகவும் அவை பயன்படுத்தப்படும். ஆகவேதான் எங்களைத் தூண்டிவிட சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் முயற்சிக்கிறார்களோ என்ற சந்தேகமும் எனக்குண்டு - என்றார்.

## மட்டக்களப்பைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னைக்குச் சென்று தங்கியிருந்த வேளையே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நால்வரும் இலங்கையில் இருந்து இந்தியா பயணிக்க 6 லட்சம் ரூபா பணம் செலுத்தியுள்ளனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பை சேர்ந்த மகேஸ்வலன் நவநீதன், அவரது மனைவி கிருபாஜினி மற்றும் அவர்களது இரு பிள்ளைகளுமே தமிழகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## கிளைமோர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



தகவலுக்கு அமைய, கிளைமோர், கப்டன் பவான் (ஐயா) - 99 எனும் வாகனத் தகர்ப்பு வெடிகுண்டு என்பன மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வெடி பொருள்கள் அதிசக்தி வாய்ந்தவை எனப் பொலிஸார் தெரிவித்தனர்

## கைதியின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அரசின் அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள் நாட்டைக் கட்டியெழுப்ப நியமிக்கப்படவில்லை. குடிகாரர்கள் மற்றும் போதைக்கு அடிமையானவர்கள் அங்கும் இங்குமாகச் சென்று, தங்கள் கைத்துப்பாக்கியை வெளியே இழுத்து அட்டகாசம் புரிகின்றனர்.

லொஹான் ரத்வத்த என்ற இராஜாங்க அமைச்சரின் நடத்தையைப் பார்த்தோம். அவருடைய தந்தை எங்களுடன் பணியாற்றியவர். ஆனால், லொஹான் தனது தந்தையை மதிக்காமல், அப்பாவி கைதிகளை முழங்காலிட வைத்துள்ளார். கைத்துப்பாக்கியுடன் கொடூரமாக அவர் செயற்பட்டிருக்கிறார்.

நானும் சிறைகளில் இருந்தேன். அங்குள்ள துக்க துயரம் எனக்குத் தெரியும். இது போன்ற நபர்கள் வந்தால், அவர்களைச் சகலரும் ஒன்றிணைந்து எலும்புகளை நசுக்கி வெளியேற்ற வேண்டும் என்று நான் கைதிகளிடம் கூறுகின்றேன். கைதிகளுக்காக மக்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் முன்நிற்பார்கள். இது போன்ற முட்டாள்தனமான செயல்களைச் செய்யும் மக்களை நீங்கள் ஒரு போதும் மன்னிக்கக்கூடாது. அரசு அவரை சிறைச்சாலைகள் அமைச்சகத்திலிருந்து மட்டும் நீக்கியுள்ளது. அவரிடம் இன்னுமொரு அமைச்சகம் உள்ளது. அவர் இன்னும் ஒரு மாணிக்கக் கதாபாத்திரத்தில் நடிக்கின்றார் என்று தெரியவருகின்றது.

இவருக்கு எதிராகப் பல முறைப்பாடுகள் உள்ளன. சண்டியர்களை வைத்துக் கொண்டு மாணிக்கக்கல் அகழ்வுகளில் ஈடுபடுகின்றார்.

கைதியின் தலையில் கைத்துப்பாக்கியை வைத்து தாக்கியவர் அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் தண்டிக்கப்பட வேண்டும். லொஹான் ரத்வத்தவுக்கு எதிராக அரசு எடுக்கும் சட்ட முடிவுகளை நாங்கள் அறிய விரும்புகின்றோம்.

ஒரு நபருக்குத் தற்காப்புக்காக மட்டுமே கைத்துப்பாக்கி வழங்கப்படுகின்றது. இந்நிலையில், அப்பாவி கைதியின் தலையில் கைத்துப்பாக்கி வைக்கப்பட்டால் அது பாரதூரமானது. அது ஒரு வன்முறைச் செயல். இந்தச் செயலில் ஈடுபட்ட லொஹான் ரத்வத்தவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அந்த ஒரு நபரின் கோழைத்தனத்துக்காகத் தமிழ் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் இதன் மூலம் இனவெறியின் உருவமாக இதை வர்ணிக்க முயற்சிக்க வேண்டாம். தற்போது இந்த நபருக்கு எந்தத் தண்டனையும் வழங்கப்படாமல் கண்துடைப்பே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவரின் நாற்காலி இன்னும் அப்படியே உள்ளது.

அப்படி ஒரு விடயம் தெரிவிக்கப்படவில்லை என்று சிறைச்சாலை ஆணையாளர் கூறுவதை நாங்கள் பார்த்தோம். ஆடைகளை அணிந்து கொண்டா இவ்வாறு கூறுகின்றார் என்று வினவுகின்றோம். ஒவ்வொரு கைதியின் பாதுகாப்பையும் அங்கீகரிப்பது மற்றும் மனித உரிமைகள் பற்றியதும் முக்கியமல்லவா என்று நாங்கள் அவரிடம் கேட்கின்றோம்.

சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பவர்களே இவ்வாறு கூறுகின்றனர். அது எப்படி நடந்தது? எவ்வாறு நடந்தது? என்று சிறைச்சாலை ஊழியர்களிடம் கேட்கலாம். சிறைச்சாலை ஆணையாளரின் இந்தக் கூற்றை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார்.

## பத்தானை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொட்டகலை, வூட்டன் பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய ஏ.தங்கவேல் என்பவரே இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 9ஆம் திகதி முதல் காணாமல் போய் விட்டார் என்று பொலிஸ் நிலையத்தில் அவரது உறவினர்களால் முறைப்பாடு பதிவு செய்துள்ள நிலையிலேயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரின் மரணம் தொடர்பாகப் பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நுவரெலியா நீதிமன்ற நீதிவானின் மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் மேலும் கூறினர்.

## லொஹானுக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தொடர்பாக விசாரணைகளை நடத்தி, அவரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி, சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழுவால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்றது எனக் கூறப்படும் குறித்த சம்பவத்தை மறைப்பதற்கு நடவடிக்கை எடுத்த சிறைச்சாலைகள் அதிகாரிகள் குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழு தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம், சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஆகியோர் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தக் குழு வலியுறுத்தியுள்ளது.

## மேலுமொரு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனாத் தொற்றுக்குள்ளான இவர் கடந்த ஓகஸ்ட் 18ஆம் திகதி பேரா தனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அவர் கடந்த மூன்று வாரங்களாக தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது உடல் சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக மட்டக்களப்பு- ஓட்டமாவடியில் இன்று அடக்கம் செய்யப்பட்டது.

## காங்கேசன்துறை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளை முன்னெடுத்து கொலையாளிகளைக் கைதுசெய்யுமாறும் உறவினர்கள் காங்கேசன்துறை பொலிஸாரிடம் கேட்டனர். அதனால் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் குழப்பநிலை ஏற்பட்டது.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து 50 மீற்றர் தொலைவில் இன்று பிற்பகல் 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த ம.ஜெனுசன் (வயது-24) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை முதன்மை வீதியின் ஓரமாக ஒருவர் வீழ்ந்து கிடந்துள்ளார். அவரை மீட்டு தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சேர்த்தபோது, உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

சம்பவ இடத்தில் அவரது மோட்டார் சைக்கிள் வீதியில் தரித்து நின்றுள்ளது.

சம்பவத்தையடுத்து அங்கு திரண்ட உறவினர்கள் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்தனர்.

இன்று நண்பகல் இடம்பெற்ற இறுதிக்கிரியை வீடொன்றில் சிலருடன் அவர் முரண்பட்டுக் கொண்டார் என்றும், அவர்களே கொலை செய்துள்ளனர் என்றும் உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு மோப்பநாயுடன் தடயவியல் பொலிஸார் அழைக்கப்பட்டனர். விசாரணைகளின் பின்னரே காரணம் கண்டறிய முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## மேலும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு இன்று வெளியிட்ட காணொலிப் பதிவிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதற்கமைய தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 73 ஆயிரத்து 78 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## இதுதான் சட்டத்தின் ஆட்சி

**அமைச்சர் லொஹான் ரத்வத்தையின் கிரிமினல்தனமான அட்டகாச நடவடிக்கை தென்னிலங்கையிலும் கடும் கண்டனங்களுக்கும் சீற்றத்துக்கும் உள்ளாகி இருக்கின்றது. வெறும் சிறைத்துறை அமைச்சுப் பொறுப்பை லொஹான் ரத்வத்தை இராஜினாமா செய்வதுடன் விடயம் அடங்கி விட முடியாது, அடக்கிவிட முடியாது என்பதுதான் பல்வேறு தரப்புகளின் கருத்தாக இருக்கிறது.**

**பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி., தமிழ் தேசியக் கூட்டமைப்பு யாவையுமே இது தொடர்பில் கடும் நடவடிக்கைக்கு வலியுறுத்துகின்றன. சர்வதேச மன்னிப்புச் சபையிலிருந்து பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் இதனையே வற்புறுத்துகின்றன. ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி கடும் வாசகங்களில் அமைந்த கண்டன அறிக்கையை வெளியிட்டு இருக்கின்றார்.**

**ஜனாதிபதி கோட்டாபயவின் நெருங்கிய வட்டாரம் அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு எப்படி ஆட்டம் போடுகின்றது என்பதற்கும் அதற்கு அரசு எவ்வளவு தூரம் அனுமதித்து நிற்கின்றது என்பதற்கும் இது நல்லதோர் எடுத்துக்காட்டு.**

**இவ்வளவும் நடந்த பின்னரும் அப்படி ஒன்றும் நடக்கவில்லை என்று சம்பந்தப்பட்ட லொஹான் ரத்வத்தை மறுக்கவில்லை. மாறாக இரண்டு சிறைச்சாலைகளிலும் நடந்த சம்பவங்களுக்கு பொறுப்பேற்று சிறைத்துறை அமைச்சை லொஹான் ரத்வத்தை இராஜினாமாச் செய்கின்றாராம். அதை ஜனாதிபதி ஏற்றுக் கொள்கின்றாராம். ஆனால் பிறிதொரு அமைச்சுடன் அவர் தொடர்ந்தும் அமைச்சராக நீடிப்பதற்கு ஜனாதிபதி அனுமதிக்கின்றாராம். என்ன திருக்கூத்து இது?**

**பல விடயங்களில் பேரினவாத நிலைப்பாட்டைப் பிரதிபலித்து, எப்போதும் சர்ச்சைக்குள்ளாகும் 'த ஐலண்ட்' கொழும்பு ஆங்கில நாளிதழ், தனது இன்றைய ஆசிரிய தலையங்கத்தில் இவ்விவகாரம் தொடர்பில் பல விடயங்களைச் சுட்டிக்காட்டி இருக்கின்றது. அவை நோக்கற்பாலவை:–**

**"வேளை கெட்ட வேளையில், சிறைகளுக்குள் பலவந்தமாக, சுடுகலன்களுடன் நுழைவது பெரும் கிரிமினல் குற்றம். அந்த வேளையில் அப்படி நுழைந்த லொஹான் ரத்வத்தையும் அவரின் சகாக்களும் ஏன் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பதற்கான காரணத்தை அரசு மக்கள் முன்வைக்க வேண்டும். அவர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை.**

**"சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தி, மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் மொட்டுக் கட்சியினர். ஆனால் பலத்த பாதுகாப்பு மிக்க சிறைச்சாலைக்கு உள்ளேயும் கூட மக்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற நிலைமைதான் இப்போது...!**

**"இப்படி அட்டகாசம், அத்துமீறல் நடத்துவதற்கு இடமளித்து, செயற்றிறனற்றுப் பார்த்திருந்த இரண்டு சிறைச்சாலைகளின் அதிகாரிகள் தொடர்பில் கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மதுபோதைக்கு ஆள்பட்டிருந்த அமைச்சரையும் அவரது கும்பலையும் அந்த ஒரு காரணத்துக்காகவே சிறைக்குள் அதிகாரிகள் அனுமதித்து இருக்கக் கூடாது.**

**"சாதாரண நபர் ஒருவர் இப்படி போதையுடன் பலவந்தமாக சிறைக்குள் நுழைந்திருந்தால் இந்த சிறை அதிகாரிகள் என்ன செய்திருப்பார்கள்? இரத்தக் கூழில் தோயும் அளவுக்கு அவரை நையப்புடைத்தெடுத்திருப்பார்கள்.**

**"சில மாதங்களுக்கு முன்னர் வெளிநாட்டுப் பிரமுகரின் பயணத்துக்காக இரவு வேளையில் தலைநகர் கொழும்பில் பிரதான வீதியை அடைத்து வைத்தமையை ஆட்சேபித்து தனது வாகனத்தில் ஹோர்ன் ஒலி எழுப்பி, மற்றவர்களையும் அதற்குத் தூண்டிய சாதாரண பிரஜையான வாகன சாரதி பொலிஸாரால் மடக்கப்பட்டு, நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு தொல்லைக்கு உட்படுத்தப்பட்டார். ஆனால் அமைச்சர் லொஹான் ரத்வத்தை இவ்வளவு அட்டகாசத்திற்குப் பின்னரும் கைது கூட செய்யப்படவில்லை."**

**– இப்படி அந்த நாளிதழ் சுட்டிக்காட்டுவது நியாயமன்றி வேறில்லை.**

## சட்டத்தின் ஆட்சி இலங்கையை சீர்குலைத்துள்ளது நெருக்கமான கண்காணிப்பு நடவடிக்கை தேவை!

### சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு வலியுறுத்து

இலங்கையில் சட்டத்தின் ஆட்சி மிகவும் சீர்குலைந்து போயுள்ளது. கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியைக் கையாளுதல் என்ற போர்வையில் மனித உரிமைகளைக் மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் இலங்கையின் நிலைவரங்கள் தொடர்பில் மிகநெருக்கமான கண்காணிப்புக்களை மேற்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானதுடன் அன்றைய தினம் இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் வாய்மூல அறிக்கையும் வெளியிடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இரண்டாம்நாள் அமர்வில் இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உரையாற்றியிருந்தமையுடன் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் அறிக்கை தொடர்பில் ஏனைய உறுப்புநாடுகள் தமது நிலைப்பாடுகளை வெளியிட்டிருந்தன.

இந்நிலையில் புதன்கிழமை மூன்றாம்நாள் அமர்வின்போது ஆப்கானிஸ்தான், இலங்கை மற்றும் வெனிசூலா ஆகிய நாடுகளின் மனித உரிமை நிலைவரங்கள் தொடர்பில் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டால் வெளியிடப்பட்ட வாய்மூல அறிக்கை தொடர்பில் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் தமது நிலைப்பாட்டை அறிவித்தன. அதன்படி சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுவின் நிலைப்பாடு தொடர்பில் தெளிவுபடுத்திய அதன் சிரேஷ்ட சட்டத்தரணி மஸ்ஸிமோ ப்ரிகோ மேலும் கூறியவை வருமாறு -

ஆப்கானிஸ்தான், இலங்கை மற்றும் வெனிசூலா ஆகிய நாடுகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரால் வெளியிடப்பட்ட வாய்மூல அறிக்கையைப் பெரிதும் வரவேற்கின்றோம். குறிப்பாக ஆப்கானிஸ்தானில் மிகமோசமடைந்துவரும் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் மனித உரிமைகள் பேரவையின் உடனடி நடவடிக்கை அவசியமாகின்றது.

இலங்கையில் சட்டத்தின் ஆட்சி மிகவும் சீர்குலைந்து போயுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியைக் கையாளுதல் என்ற விடயம் (காரணம்) சட்டக்கடப்பாடுகளை மீறுவதற்கும் நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையில் தலையீடுசெய்வதற்கும் மனித உரிமைகளைத் தன்னிச்சையாக மட்டுப்படுத்துவதற்கும் தன்னிச்சையான கைது மற்றும் தடுத்துவைப்பின் ஊடாக அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

அதுமாத்திரமன்றி மனித உரிமைமீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் மேலும் பின்னடைவைச் சந்தித்துள்ளமை தொடர்பில் பெரிதும் கவலையடைகின்றோம்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் இலங்கையின் நிலைவரங்கள் தொடர்பில் மிகநெருக்கமான கண்காணிப்புக்களை மேற்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தை வலியுறுத்துகின்றோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## வைத்தியசாலையின் 4 ஆவது மாடியிலிருந்து கீழே விழுந்து சுகாதாரப் பரிசோதகர் காயம்



பண்டாரவெல கொவிட் வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் குறித்த வைத்தியசாலையின் 4 ஆவது மாடியில் இருந்து கீழே விழுந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி வைத்தியசாலையில் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த வாசல் ஒன்றின் ஊடாக அவர் இவ்வாறு விழுந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் பலத்த காயமடைந்த அவர் தியதலாவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## அச்சுவேலியில் வன்முறைக் கும்பல் அட்டகாசம் பொலிஸார் அசண்டையீனம் என குற்றச்சாட்டு

அச்சுவேலியில் வன்முறைக் கும்பல் ஒன்றின் தாக்குதலுக்கு இலக்கான குடும்பம், பொலிஸ் நிலையத்துக்கு தெரியப்படுத்தியும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரிடம் முறையிடப்பட்டுள்ளது.

அச்சுவேலி மேற்கு, ஜோன்ராஜா வீதியில் கைக்குழந்தையுடன் வசித்து வரும் இளம் தம்பதியினரின் வீட்டினுள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 11 மணியளவில் மூவர் அடங்கிய கும்பல் ஒன்று ஆயுதங்களுடன் புகுந்து வீட்டின் மீது தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

வீட்டின் கேட், ஜன்னல், கண்ணாடிகள் மற்றும் கதவுகள் என்பவற்றின் மீது தாக்குதலை மேற்கொண்டு அவற்றை சேதப்படுத்தி, வீட்டில் இருந்த தம்பதியினரையும் அச்சுறுத்திவிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தாக்குதல் சம்பவத்தில் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் சேதமாகியுள்ளன.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் முறையிட்டுள்ளனர்.



இருந்த போதும் நேற்று (புதன்கிழமை) காலை 10 மணி வரையில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுக்கவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையிலேயே, பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரிடம் முறையிட்டுள்ளனர்.

# வடகொரிய நாட்டைத் தொடர்ந்து தென்கொரியா ஏவுகணை சோதனை!

## தீபகற்பத்தில் பதற்றம்




வடகொரியா ஏவுகணை சோதனை செய்த சில மணி நேரங்களில், தென் கொரியாவும் ஏவுகணை சோதனை செய்துள்ளது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தீர்மானங்களை மீறி ஆறு மாதங்களில் நாட்டின் முதல் பாலிஸ்டிக் ஏவுகணை சோதனையை நேற்று (புதன் கிழமை) வடகொரியா மேற்கொண்டது.

வடகொரியா தனது கிழக்கு கடற்கரையில் இரண்டு பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவிய சில மணி நேரங்களுக்குப் பிறகு, தென்கொரியா, அதன் தலைவர் மூன்ஜே-இன், நாட்டின் முதல் நீர்மூழ்கிக் கப்பல் ஏவப்பட்ட பாலிஸ்டிக் ஏவுகணையின் சோதனையில் கலந்து கொண்டார். தென்கொரியா, வெற் றிகரமாக ஒரு சூப்பர் சோனிக் கப்பல் ஏவுகணை மற்றும் நீண்ட தூர வான் வழி ஏவுகணையான கே.எஃப்.-21 ஏவுகணை சோதனை செய்துள்ளது.

வடகொரியாவின் நிலத்தடி போர்க்கால பதுங்கு குழிகளை ஊடுருவிச் செல்லும் அளவுக்கு சக்திவாய்ந்த ஏவுகணை இதுவாகும்.

இதன்மூலம் நீர்மூழ்கிக் கப்பல் மூலம் பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவும் உலகின் ஏழாவது நாடாக தென் கொரியா மாறியது. அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இந்தப் பட்டியலில் உள்ளன.

வொஷிங்டனுக்கும் வடகொரியாவுக்கும் இடையிலான அணு ஆயுத ஒழிப்பு பேச்சு நிறுத்தப்பட்டதால், ஒரே நாளில் இரு கொரியாக்களும் நடத்திய ஏவுகணை சோதனைகள், கொரிய தீபகற்பத்தில் தீவிரமடையும் ஆயுதப் போட்டியை வெளிக்காட்டியது.

பிராந்திய ஸ்திரத்தன்மை குறித்த வளர்ந்து வரும் கவலையை அவர்கள் அடிக்கோடிட்டுக் காட்டினார்கள். ஜப்பானின் பிரதமர் யோஷிஹிட் சுகா, வட கொரிய ஏவுகணை ஏவுதலை மூர்க்கத்தனமான மற்றும் அமைதிக்கு அச்சுறுத்தலானது என்று குறிப்பிட்டார்.

# பிரிட்டிஷ் வெளியுறவு செயலராக எலிசபெத் ட்ரஸ் நியமிக்கப்பட்டார்



பிரித்தானியாவின் வெளியுறவு, பொது நலவாய மற்றும் மேம்பாட்டு விவகாரங்களுக்கான செயலாளராக எலிசபெத் ட்ரஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

'பிரித்தானியாவுக்கு வழங்கப் போகும் ஒரு வலுவான மற்றும் ஐக்கியப்பட்ட குழுவை பிரதமர் அமைத்துள்ளார்' என்று ட்ரஸ் கூறினார்.

பிரதமர் ஜோன்சன், தனது புதிய அமைச்சரவை 'நாடு முழுவதையும் ஒன்றிணைத்து சமன் செய்ய அயராது உழைக்கும்' என கூறினார்.

பிரதமர் பொரிஸ் ஜோன்ஸனின் அமைச்சரவை மாற்றத்தில் வெளியுறவுத்துறை செயலாளராக இருந்த டொமினிக் ராப்புக்கு பதிலாக லிஸ் ட்ரஸ், வெளியுறவு செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மைக்கேல் கோவ், வீட்டுவசதி, சமூகங்கள் மற்றும் உள்ளூர் அரசாங்க அமைச்சகத்திற்கு மாற்றப்படுகிறார் என அறிவிக்கப்பட்டதால், அவருக்குப் பதவி உயர்வு வந்தது.

இதன்மூலம், கன்சர்வேடிவ் வாக்காளர்களிடையே மிகவும் பிரபலமான அமைச்சரவை அமைச்சரான லிஸ் ட்ரஸ், குறிப்பிடத்தக்க பதவி உயர்வு பெற்று முதல் பெண் டோரி வெளியுறவு செயலாளராக ஆனார். இதற்கு முன் சர்வதேச வர்த்தக செயலாளராக பணியாற்றிய லிஸ் ட்ரஸ், இரண் டாவது பெண் வெளியுறவு செயலாளராக உள்ளார்.

ப்ரிதி பட்டேல் தனது உள்துறை செயலாளராக தனது வேலையை வைத்திருப்பதை உறுதிசெய்த பிறகு பெண்கள் இப்போது நான்கு சிறந்த அமைச்சரவை வேலைகளில் இரண்டை ஆக்கிரமித்துள்ளனர். மற்ற இரண்டு முக்கிய வேலைகள் ரிஷி சுனக் மற்றும் பிரதமரால் பராமரிக்கப்படுகின்றன.



# நோர்வே பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சி வெற்றி பெற்றது

நோர்வேயில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

குறித்த தேர்தலில் மைய இடது சாரி கூட்டணி ஆட்சி அமைக்க வழி வகுத் திருக்கும் நிலையில் பிரதமர் தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளார்.

'நாம் வெற்றிபெற்றுள்ளோம்' என அறிவித்திருக்கும் தொழிலாளர் கட்சி தலைவர் ஜோனஸ் காஹர், கூட்டணி அரசொன்றை அமைக்க முயற்சிக்கவுள்ளார்.

168 இடங்களை கொண்ட நாடாளுமன்றத்தில் தொழிலாளர் கட்சி 48 ஆசனங்களை வென்றுள்ளது.

இந்நிலையில் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கான பேச்சில் இடதுசாரி கட்சிகளுடன் அது ஈடுபடவுள்ளது.

நோர்வே எண்ணெய் தொழில் துறை மற்றும் காலநிலை மாற்றம் ஆகிய விடயங்கள் தேர்தல் பிரசாரத்தில் அவதானம் செலுத்தப்பட்டிருந்தது.

நோர்வேயின் மிகப்பெரிய ஏற்றுமதியாக எண்ணெய் இருக்கும் நிலையில் நாட்டின் கார்பன் உமிழ்வை குறைக்க சில ஆண்டுகளுக்கு அந்த உற்பத்தியை நிறுத்த பசுமை கட்சி பிரசாரம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தேர்தலில், இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த கம்சி குணரத்னம் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# இயற்கை ஆர்வலர்கள் 227 பேர் 2020 இல் சாவு

2020ஆம் ஆண்டில் உலகெங்கிலும் இயற்கையைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த 227 பேர் உயிரிழந்துள்ளனர்.

காடுகள், இயற்கை வளங்கள் போன்றவற்றைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது இவர்கள் உயிரிழந்துள்ளனர் என 'கிளோபல் விட்னஸ்' எனும் மனித உரிமைக் குழு நடத்திய ஆய்வின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

கொலம்பியாவில் பழங்குடியினருக்குச் சொந்தமான நிலம், காடுகள் அல்லது கோக்கோ பயிர்களை அழிவிலிருந்து காப்பாற்ற முயன்ற சுமார் 65 பேர் உயிரிழந்துள்ளனர். அது போன்ற காரணத்துக்காக உலகில் மிக அதிகமானோர் கொலம்பியாவில் உயிரிழந்துள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அதற்கு இரண்டாம் நிலையில் மெக்சிக்கோ உள்ளது. அங்கு 30 பேர், காடுகளைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது உயிரிழந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸில் 29 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். அவர்கள் சுரங்கவேலைகள், மரம் வெட்டுதல், அணை கட்டும் திட்டம் ஆகியவற்றை நிறுத்தும் முயற்சியின்போது உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

காலநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் உடன்படிக்கை 2015 ஆம் ஆண்டு கைச்சாத்தானது தொடக்கம் ஒவ்வொரு வாரமும் சராசரியாக நான்கு இயற்கை ஆர்வலர்கள் உயிரிழக்கின்றனர் எனக் குறிப்பிடப்படுகின்றது.



# அல்கொய்தா அமைப்பு தொடர்பாக அமெரிக்க உளவுத்துறை எச்சரிக்கை!

தீவிரவாத அமைப்பு குறித்து அமெரிக்க உளவுத்துறை கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளது.

செப்டெம்பர் 11 தாக்குதல்களை நடத்திய குறித்த தீரவாத அமைப்பு, ஆப்கானிஸ்தானில் அடுத்த ஓரிரு ஆண்டுகளில் மீண்டும் வலுப்பெறும் என இதன்போது எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது அமெரிக்காவிற்கு அச்சுறுத்தலாக அமையலாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# சமூகநீதிக்கான கண்காணிப்புக் குழு அமைக்கப்படும் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் இன்று அறிவித்தார்



தமிழ்நாட்டில் கல்வி, வேலைவாய்ப்புகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூக நீதி முழுமையாக, முறையாக பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க அரசு அதிகாரிகள், சட்ட வல்லுநர்கள், கல்வியாளர்கள் ஆகியோரை கொண்ட கண்காணிப்பு குழுவை அமைக்கப்போகிறேன் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘திராவிட இயக்கம் என்பது சாமானியர்கள் உயர்வதற்காக, சாமானியர்களால் சரித்திரம் படைக்கப்பட்ட – தொடர்ந்து படைக்கப்படும் உயரிய வரலாற்றைக் கொண்டது’ என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார். இந்த வரலாறு இன்று நேற்றல்ல; நூற்றாண்டுத் தொடர்ச்சியைக் கொண்டதாகும்.

1916 ஆம் ஆண்டு தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரால் தொடங்கப்பட்ட நீதிக்கட்சியானது அன்றைய சென்னை மாகாணத்தில் சமூகநீதி, தீண்டாமை ஒழிப்பு, ஒடுக்கப்பட்டோர் உரிமை, சுயாட்சிக் கருத்துகள் ஆகியவற்றுக்காக குரல் கொடுத்தது. 1920 ஆம் ஆண்டு நடந்த முதல் தேர்தலில் வென்ற நீதிக்கட்சியின் ஆட்சியானது, இதனை பல்வேறு அரசாணைகள் மூலமாகச் செயல்படுத்தியது.

அதில் மிகமிக முக்கியமான அரசாணை வெளியிடப்பட்டு இன்றுடன் 100 ஆண்டுகள் ஆகின்றன. அதுதான் தமிழ்ச்சமுதாயத்தின் பல தலைமுறைகளை மாற்றிய சமூகநீதி அரசாணையாகும். 16.9.1921 ஆம் நாள் அன்றைய நீதிக்கட்சி ஆட்சியின் முதலமைச்சரான பனகல் அரசர் காலத்தில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அரசுப்பணிகளில் குறிப்பிட்ட வகுப்பினர் ஆதிக்கம் செலுத்தும் நிலை இருக்குமானால் அது நாட்டுக்குப் பெரும் தீங்கை விளைவிக்கும். அனைத்துச் சமூகத்தினரும் ஏற்றம் பெறும் வகையில் மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு பணியிடங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற அடித்தளத்தில் அந்த அரசாணை வெளியிடப்பட்டது. இதுதான் சமூகநீதிக்கான அடித்தளமாகும். அதிலிருந்துதான் சமூகநீதி வரலாற்றின் மாபெரும் பயணம் தொடங்கியது.

நூறுஆண்டுகள்கழித்துசெப்டெம்பர் 16 ஆம் நாளான இன்று வெள்ளுடை வேந்தர் தியாகராயர், சமுதாய சீர்திருத்த மருத்துவர்களான நடேசனார், டி.எம். நாயர், கடலூர் ஏ.சுப்பராயலு, பனகல் அரசர், அமைச்சர் எஸ்.முத்தையா, பி.டி.இராஜன் ஆகியோரை நினைத்துப் பார்க்கிறேன். இவர்கள் உள்ளிட்ட பெருமக்கள் அன்று தொடங்கி வைத்த சமூகநீதிப் புரட்சிதான் தமிழ்ச்சமுதாயத்தின் லட்சக்கணக்கான இல்லங்களில் விளக்கேற்றக் காரணமாக அமைந்தது.

இந்த உத்தரவை எப்படிச் செயல்படுத்த வேண்டும் என்ற தரவரிசைப் பட்டியலைத் தயாரித்துக்கொடுத்தார் அன்றைய அமைச்சர் எஸ்.முத்தையா அவர்கள். அதனால்தான், ‘இனிப் பிறக்கும் பிள்ளைகளுக்கு முத்தையா என்று பெயர் சூட்டுங்கள்’ என்றார் தந்தை பெரியார் அவர்கள்.

இந்தச் சமூகநீதி அரசாணையானது தமிழ்நாடு எல்லையைக் கடந்து இந்தியா முழுவதும் இன்று வெற்றி நடைபோட்டு வருகிறது. இத்தகைய அகில இந்தியப் புரட்சிக்குக் காரணமான அனைவரையும் இந்த நேரத்தில் வணங்குகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசானது, இத்தகைய சமூகநீதிப் பயணத்தின் அடுத்தகட்டத்தை இன்று முதல் அறிமுகம் செய்ய இருக்கிறது.

சமூகநீதி அளவுகோலானது சட்டப்படி இருக்கிறது. ஆனால், அது முழுமையாகசெயல்படுத்தப்படுகிறதாஎன்பதைக் கண்காணிப்பதற்காக தமிழ்நாடு அரசால் ஒரு கண்காணிப்புக் குழுவை அமைக்க முடிவெடுத்துள்ளோம். கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூகநீதி அளவுகோல் முறையாக, முழுமையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதை இக்குழு கண்காணிக்கும் வழிகாட்டும் செயல்படுத்தும்.

சரியாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்கு இக்குழு பரிந்துரை செய்யும். இதற்கான விதிமுறைகள் விரைவில் வெளியிடப்படும். இதில் அரசு அதிகாரிகள், கல்வியாளர்கள், சட்ட வல்லுநர்கள் இடம்பெறுவார்கள். சமூகநீதி அரசாணையின் நூற்றாண்டு நாளில் சமூகநீதிக் கண்காணிப்புக் குழுவை அமைப்பதில் பெருமை அடைகிறேன். எல்லோர்க்கும் எல்லாம் என்ற திசை நோக்கி நடக்கட்டும் இந்த வையம் என தெரிவித்துள்ளார்.



# உள்ளாட்சித் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் தனித்துப் போட்டியிடுமென கமல் அறிவிப்பு

ஊரக உள்ளாட்சித் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் தனித்துப் போட்டியிடும் என அக்கட்சியின் தலைவர் கமல்ஹாசன் அறிவித்துள்ளார்.

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி, தென்காசி ஆகிய 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் வரும் ஒக்டோபர் 6 மற்றும் 9 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது. இதையடுத்து, தேர்தல் பணிகள், கூட்டணி உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளில் அரசியல் கட்சிகள் இறங்கியுள்ளன.

இந்த நிலையில், ஊரக உள்ளாட்சித் தேர்தலில் மக்கள் நீதிமய்யம்தனித்துப்போட்டியிடும் என அக்கட்சியின் தலைவர் கமல்ஹாசன்இன்றுஅறிவித்துள்ளார். இது தொடர்பாக கமல்ஹாசன் இன்று தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், ‘உள்ளாட்சித் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் தனித்துப் போட்டியிடுகிறது. 9 மாவட்டங்களிலும் பரப்புரைப் பயணம் மேற்கொள்ளவிருக்கிறேன். களத்தில் சந்திப்போம். வெற்றி நமதே’ என தெரிவித்துள்ளார்.

# தீபாவளிக்குப் பட்டாசு வெடிக்க டெல்லியில் இம்முறையும் தடை



வெடிபொருள்களைஉபயோகிப்பதால் காற்று மாசுபாடு ஏற்பட்டு, அதனால் உடல்நலக்கேடு உண்டாகும் என வலியுறுத்தி, டெல்லி அரசு இந்த வருடம் தீபாவளிக் கொண்டாட்டத்தின்போதும் மாநிலத்தில் பட்டாசு வெடிக்கத் தடை விதித்துள்ளது. பட்டாசுப் பொருள்கள் மீதான விற்பனைக்கும் அவற்றை இருப்பு வைக்கவும் தடை விதிக்கப்படுகிறது என டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். கடந்த மூன்று ஆண்டுகளாகவே டெல்லியில் தீபாவளிக்கு பட்டாசு வெடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுவரும் நிலையில், இந்த வருடமும் அது தொடர்ந்திருக்கிறது.

பசுமைப் பட்டாசு என விலக்கு அளிக்காமல், ஒட்டுமொத்த பட்டாசு விற்பனை மற்றும் உபயோகத்துக்கு டெல்லி அரசு தடை விதித்துள்ளது.

இந்தத் தடையானது கடந்த ஆண்டுகளில் தமிழகத்தில் சிவகாசி மற்றும் விருதுநகர் உள்ளிட்ட பகுதிகளில் பட்டாசு உற்பத்தியாளர்களைப் பாதித்ததுபோலவே இந்த ஆண்டும் பாதிக்கும் என கருதப்படுகிறது. சென்ற வருடம் கொவிட் கட்டுப்பாடுகள் காரணமாக பட்டாசு விற்பனை டெல்லி உள்ளிட்ட வடமாநிலங்களில் மிகவும் குறைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

நவம்பர் முதல் வாரத்தில் தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட உள்ள நிலையில், டெல்லி அரசு இந்த வருடம் முன்கூட்டியே பட்டாசு தடையை அறிவித்துள்ளது. சென்ற வருடம் பட்டாசு விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டபோது, வியாபாரிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஏற்கெனவே பட்டாசுகளை கொள்முதல் செய்து கிடங்குகளில் இருப்பு வைத்துள்ளதால், அதிக நஷ்டம் ஏற்பட்டுள்ளது என வியாபாரிகள் வலியுறுத்தியிருந்தனர். அதனாலேயே இந்தவருடம் டெல்லி அரசு முன்கூட்டியே தடையை அறிவித்துள்ளதாக சொல்லப்படுகிறது. வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்படுவதைத் தடுக்க முன்கூட்டியே அறிவிப்பு வெளியிடப்படுவதாக கெஜ்ரிவாலும் விளக்கியுள்ளார்.

பொதுமுடக்கம் காரணமாக டெல்லியில் கடந்த வருடம் காற்று மாசு கோடை காலத்தில் குறைந்தாலும், பின்னர் பயிர்க்கழிவு எரிப்பின் காரணமாக அதிகரித்தது. ஆகவே காற்று மாசுபடுவதைத் தடுக்க இவ்வருடத்தில் பயிர்க்கழிவுகளை எரிக்கவேண்டாம் என்றும் வலியுறுத்தியுள்ள டெல்லி அரசு, விவசாயிகள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.



# அகரத்தில் நடைபெறும் அகழாய்வில் உறை கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டன

சிவகங்கை மாவட்டம் கீழடி, அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய பகுதிகளில் தொல்லியல்துறைசார்பில்அகழ்வாராய்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில், சுடுமண் முத்திரை, காதணிகள், தந்தத்தினாலான பகடை, முதுமக்கள் தாழி, உருவப் பொம்மை, கறுப்பு-சிவப்பு நிறத்தினாலான பானை ஓடுகள், தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், பழங்கால மக்கள் பயன்படுத்திவந்த பொருள்கள், நெசவுத் தொழிலுக்குப் பயன்படுத்தும் கருவிகள் உள்ளிட்ட ஏராளமான தொல் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவற்றையடுத்து தற்போது அகழாய்வு நடைபெறும் அகரம் பகுதியில் உறை கிணறுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என தமிழக தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

# மட்டு .ஓட்டமாவடியில் இதுவரையில் 2 ஆயிரத்து 850 சடலங்கள் அடக்கம்



மட்டக்களப்பு ஓட்டமாவடி சூடுபத்தினசேனையில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தவர்களின் 2 ஆயிரத்து 850 சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக நேற்று ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌஃபர் தெரிவித்தார்.

நாட்டில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்ய அடையாளப்படுத்தப்பட்ட ஒரே ஒரு இடம் ஓட்டமாவடி பிரதேச சபை எல்லைக்குள் உள்ள பகுதியான மஜீமா நகர் சூடுபத்தினசேனை. இந்த பொது மயானத்திலே சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுவருகின்றன.

இதனை எமது சபை பொறுப்பேற்று மனிதவலு, இயந்திரவலு என்பவற்றை பயன்படுத்தி மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. இதற்கு இராணுவத்தினர்,சுகாதாரப் பணியாளர்கள் ஒத்துழைப்புக்களை வழங்கிவருகின்றனர்.

இதுவரையில் 2,850 சடலங்கள் இங்கே அடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது கிழக்கு மாகாணத்தில் இருந்து நாளாந்தம் அதிகமான சடலங்கள் வருகின்றன என அவர் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் திலீபன் நினைவேந்தலுக்கு நான்கு பேருக்கு நீதிமன்றம் தடை உத்தரவு

மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராசா சரவணபவன், தமிழரசு கட்சி இளைஞர் அணி செயலாளர் கிருஷ்ணபிள்ளை சேயோன், பேரின்பராசா ஜனகன், சுவீகரன் நிசாந்தன் ஆகிய 4 பேருக்கு எதிராக தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை நினைகூருவதற்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் நேற்று புதன் கிழமை தடை உத்தரவு பிறப்பித்து கட்டளையிட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பொ.ப.கஜநாயக்கா மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றிற்கு குறித்த நான்கு பேரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் திலீபனின் நினைவு கூரும் நடவடிக்கையை நேற்று 15ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 26ஆம் திகதிவரை மேற்கொள்ள உள்ளனர் என பொலிஸ் நிலைய புலனாய்வு உத்தியோகத்தர்களால் நம்பகரமான தகவல் கிடைத்துள்ளதாகவும். இவ்வாறன நிகழ்வு நடந்தால் இதற்கு எதிரானவர்களால் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவாய்ப்பு இருப்பதனால் மற்றும் நாட்டில் தற்போது கொரோனா நோய் தாக்கம் அதிகரித்துள்ளதன் காரணமாகஇந்த நோய் தொற்றை கட்டுப்படுத்தும் முகமாக சுகாதார நடவடிக்கையினை நாட்டு மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் இருப்பதனால் இவ்வாறான நினைவு கூரல் நட வடிக்கை நடைபெறாமல் தடை உத்தரவு ஒன்றை பிறப்பிக்குமாறு மன்றிற்கு அறிக்கை செய்தனர்.

இதன் படி பொலிஸாரால் மன்றுக்கு கோப்பிடப்பட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் பொலிஸார் குறித்த இடத்தில் 15ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதிவரையில் மேற்கொள்ள தீர்மானித்திருக்கும் நடவடிக்கையினை தடுத்து நிறுத்தும் பொருட்டு தடை உத்தரவை பிறப்பிப்பதற்கு ஏதுக்கள் இருப்பது மன்று திருப்திபடுவதனால் 1979 ஆம் ஆண்டு 15ஆம் இலக்க குற்றவியல் நடை முறைச்சட்டகோவையின் பிரிவு (106)1 கீழ் பொலிஸார் கோரியவாறு தடை உத்தரவு பிறப்பித்து கட்டளை பிறப்பித்துள்ளது.

இந்த நீதிமன்ற தடை உத்தரவினை உரியவர்களிடம் கையளிக்க நடவடிக்கை மேற்கொண்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.



## மட்டக்களப்பு வவுணதீவு ஆற்றில் குதித்து ஒருவர் உயிர்மாய்ப்பு

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி எருவில் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் வவுணதீவு வளையிறவு ஆற்றில் வீழ்ந்து தற்கொலை செய்துகொண்டார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி எருவில் பகுதியைச் சேர்ந்த யோகநாதன் ராஜ் என்ற 26 வயதுடைய குடும்பஸ்தர் நேற்று மாலை ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வவுணதீவு வளையிறவு ஆற்றுப்பகுதியில் விழுந்து தற்கொலை செய்துகொண்டார் என உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். ஆற்றுப்பகுதியில் தற்கொலை செய்து கொண்டார் எனத் தெரிவிக்கப்படும் குறித்த குடும்பஸ்தரை தேடும் பணிகளில் உறவினர்கள் மற்றும் மட்டக்களப்பு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

## காலமானார் நந்தினி சேவியர்



ஈழத்தின் முக்கிய மூத்த கதை சொல்லியானதிருகோணமலையைச் சேர்ந்த நந்தினி சேவியர் காலமானார்

நந்தினி சேவியர் அவர்களின் பிரிவு அவரை நேசித்த இலக்கிய நண்பர்களுக்கு பெரும் துயர்.

இடையிடையே நோய் உபாதைகளுக்கு உள்ளாகி இருந்தாலும்தொடர்ச்சியாக எழுத்துத் துறையில் இயங்கி வந்தார். வாழ்வில் தளராத நம்பிக்கை உடையவர்.

ஈழத்தின் புகழ்பூத்த இலக்கிய ஆளுமைகளில் ஒருவரான நந்தினி சேவியர் கடந்த ஆறு நாள்களுக்கு முதலும் , நான்கு நாள்களுக்கு முதலும் மரண சாசனம் போல ஒரு பதிவை தனது முகநூலில் சேர்த்திருந்தார்.

நம்மைச் சுற்றி நாளும் நிகழும் முதியோர்களின் மரணம் முற்றிலும் இயற்கையானது தானா?

ஏன் அது குறித்து யாரும் அதிகம் பேசுவதில்லை? குறிப்பாக இரண்டு தடுப்பூசிகள் போட்ட பின்னர் பல முதியவர்கள் இறந்துள்ளார்கள்.

இது குறித்த தகவல் திரட்டாமல், பகுப்பாய் வையோ நாடலாவிய ரீதியில் செய்யாமல் இருப்பது என்ன நியாயம்?

மருத்துவத் துறையினரிடம் கேட்டால், ஒரே பதில்,அவர்களுக்கு வேறு வேறு நோய்கள் இருந்தன என்பது.

சரி வேறு வேறு நோய்களுடன் அவர்கள் உயிருடன் இருந்தார்களே என்றால், இல்லை ஊசி போடாவிட்டாலும் அவர்கள் இறந்திருப்பார்கள் என்பது போல பதிலளிக்கிறார்கள்.

தடுப்பூசி மரணங்களுக்கு மருத்துவத்துறை பொறுப்பில்லையெனில் எதற்காக கட்டாயப்படுத்தி தடுப்பூசிகளைப் போடவேண்டும். என்ற கேள்வியை கேட்டு இருந்தார் இன்றைய தினம் அவரும் மறைந்துள்ளார்.

## புதிதாக கொரோனா சிகிச்சைக்கான விடுதிகள் திறந்து வைக்கப்பட்டன

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கொரோனா சிகிச்சைக்கான விடுதிகள் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலையின் பதில் வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் எம்.எச்.கே.சனூஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி.சுகுணன் கலந்து கொண்டு இவ்விடுதிகளை திறந்து வைத்தார்.

இங்குள்ள கட்டடங்கள் சுமார் 9 லட்சம் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு, கொரோனா சிகிச்சைக்கென 2 விடுதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆண், பெண் கொரோனாத் தொற்றாளர்களுக்கென தனித்தனியாக ஏற்படுத்தப்பட்டுள்ள இவ்விடுதிகளில் கொவிட் நோயாளிகளுக்கான 50 கட்டில்கள் மற்றும் தாதியர்களுக்கான ஓய்வறைகள் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

கல்முனை பிராந்திய வைத்தியசாலைகளிலுள்ள கொவிட்-19 தொற்றாளர்களுக்கான சிகிச்சை நிலையங்களில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி காரணமாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி.சுகுணன் முன்வைத்த வேண்டுகோளுக்கிணங்க கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் இவ்விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இது கல்முனைப் பிராந்தியத்தில் அமைக்கப்பட்டுள்ள 05ஆவது கொரோனா சிகிச்சை நிலையமாகும்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கரீபியன் பிரீமியர் லீக்கில் முதல்முறையாக சம்பியன் பட்டம் வென்றது பட்ரியட்ஸ் அணி!




கரீபியன் பிரீமியர் லீக்கின் ஒன்பதாவது தொடரில் சென்.கிட்ஸ் நெவிஸ் பட்ரியட்ஸ் அணி முதல்முறையாக சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

இறுதிப் போட்டியில், சென். கிட்ஸ் நெவிஸ் பெட்ரியட்ஸ் அணியும் சென்ட் லுசியா கிங்ஸ் அணியும் மோதியிருந்தன. இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்ட் லுசியா கிங்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது. கோர்ன்வால் மற்றும் ரொஸ்டன் சேஸ் ஆகியோர் தலா 43 ஓட்டங்களை எடுத்தனர்.

சென்.கிட்ஸ் நெவிஸ் பட்ரியட்ஸ் அணியின் பவாட் அஹமட் மற்றும் நசிம் ஷா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 160 என்ற வெற்றி இலக்கை நோக்கிக் களமிறங்கிய சென்.கிட்ஸ் நெவிஸ் பட்ரியட்ஸ் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் வெற்றி இலக்கையடைந்தது. 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்ற பட்ரியட்ஸ் அணி, தனது முதல் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது. டொமினிக் ட்ரேக்ஸ் ஆட்டமிழக்காது 48 ஓட்டங்களையும் ஜோசுவா த சில்வா 37 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். சென்ட் லுசியா கிங்ஸ் அணியின் வஹாப் ரியாஸ் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக பட்ரியட்ஸ் அணியை வெற்றிக்கு அழைத்துச்சென்ற டொமினிக் ட்ரேக்ஸ்சும் தொடரின் நாயகனாக சென்ட் லுசியா கிங்ஸ் அணியின் ரொஸ்டன் சேசும் தெரிவுசெய்யப்பட்டனர்.



# காப்புறுதிப் பணத்தைப் பற்றியே இங்கிலாந்து கவலைப்படுகிறது

## பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவர் சல்மான் பட் விமர்சனம்

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்தாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கொரோனா அச்சத்தால் ரத்துச்செய்யப்பட்டது. இந்திய வீரர்கள் விளையாட விரும்பவில்லை என்பதால்தான் இந்தப் போட்டியை நிறுத்தினார்கள் என்றும், ஐ.பி.எல். போட்டியால்தான் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ.) ஐந்தாவது போட்டியை ரத்துச்செய்ய விரும்பியது எனவும் விமர்சனங்கள் எழுந்தன.

நான்காவது போட்டி நடைபெறுவதற்கு சில தினங்கள் முன்னதாக புத்தக வெளியீடு ஒன்றில் இந்திய அணியின் பயிற்சியாளர் ரவி சாஸ்திரியும் அணி வீரர்கள் சிலரும் கலந்து கொண்டனர் எனவும் அதன் காரணமாகவே அணிக்குள் கொரோனாத் தொற்று ஊடுருவியது என்றும் தகவல்கள் வெளியாகி சர்ச்சையைக் கிளப்பின.

இந்த நிலையில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவரான சல்மான் பட், இந்தப் போட்டி தொடர்பாக இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் மீது விமர்சனம் செய்துள்ளார். இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான ஐந்தாவது டெஸ்ட் போட்டி ரத்துச் செய்யப்பட்டமை குறித்து கருத்துப் பகிர்ந்த அவர், "இங்கிலாந்து கிரிக்கெட் சபை, தமது அணி தொடரை 2-2 என சமன் செய்யவோ அல்லது சம்பியன்ஷிப் புள்ளிகளைப் பெறவேண்டுமெனவோ எண்ணவில்லை. போட்டியின் நிலைமைகள் குறித்துப் பேசக்கூட விரும்பவில்லை. போட்டிக்கான காப்புறுதிப் பணமான 4 கோடி பவுண்ட்ஸ் பணம் பற்றித்தான் அது கவலைப்படுகிறது" என்று தெரிவித்துள்ளார். இதே விமர்சனத்தை வேறு சில கிரிக்கெட் ஆய்வாளர்களும் முன் வைத்துள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது.

# 2021 – 2022 காலப்பகுதிக்கான மெய்வல்லுநர் போட்டிகளின் அட்டவணை வெளியானது

Sir Lanka Athletics
Competition Calendar
2021/2022

| Date(s) | Competition | Venue | Country |
|---|---|---|---|
| **2021** | | | |
| 2021 October 30, 31 | Nationals 2021 Stage 2 | Colombo | Sri Lanka |
| 2021 Mid of November | 1st Selection trials for 4th Asian Youth Champ. | Colombo | Sri Lanka |
| 2021 December 11 | Performance Analyze Test of Nat/Elite pool | Colombo | Sri Lanka |
| **2022** | | | |
| 2022 February 11, 12 | Asian indoor Championships | Nur-sultan | Kazakhstan |
| 2022 February 11, 12, 13 | 1st Selection Trials for Asian Games | Colombo | Sri Lanka |
| 2022 February 12/13 | Final Selection trials Asian youth Championships & 1st Selection trials for Asian Junior Championships | Colombo | Sri Lanka |
| 2022 March 01 - 04 | 4th Asian youth Championships | Kuwait | Kuwait |
| 2022 March 11, 12, 13 | 2nd Selection Trials for Asian Games | Colombo | Sri Lanka |
| 2022 March 18-20 | World indoor Championships | Belgrade | Serbia |
| 2022 April 08, 09, 10 | Nationals Championships 2022 (Final Trials) | Colombo | Sri Lanka |
| 2022 May | Asian Grand prix | | TBD |
| 2022 May 9-12 | Junior National Championships (Final Junior Trials) | Colombo | Sri Lanka |
| 2022 June 16-19 | 20th Asian Junior Championships Yecheon-gun | | South Korea |
| 2022 June 11, 12 | Performance Analyze Test of Nat/Elite pool | Colombo | Sri Lanka |
| 2022 July 02 | Fitness trial for commonwealth Games team | Colombo | Sri Lanka |
| 2022 July 15 -24 | Word Championships | Eugene | USA |
| 2022 August 02 - 07 | Commonwealth Games | Birmingham | UK |
| 2022 August 02 - 07 | World Junior Championships | Cali | Colombia |
| 2022 September 03 | Fitness trial for Asian Games team | Colombo | Sri Lanka |
| 2022 September 16 -22 | Asian Games | Hangzhou | China |

இந்த ஆண்டின் இறுதியிலும் அடுத்த ஆண்டும் நடைபெறவுள்ள தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான மெய்வல்லுநர் போட்டிகளின் அட்டவணையை இலங்கை மெய்வல்லுநர் சங்கம் வெளியிட்டுள்ளது. இதில் கொரோனாப் பரவல் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட இந்த ஆண்டுக்கான 99ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரின் இரண்டாவது பகுதி, ஒக்டோபர் மாதம் 30ஆம், 31ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் ஆசிய இளையோர் மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடருக்கான தகுதிகாண் போட்டிகளையும், டிசெம்பர் மாதம் தேசிய மற்றும் சுப்பர் மெய்வல்லுநர் குழாம்களில் இடம்பெறுள்ள வீரர்களின் திறமைகளை மீள்பரிசீலனை செய்கின்ற தெரிவுப் போட்டிகளையும் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டுக்கான தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடர் ஏப்ரல் 8 ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை நடைபெறவுள்ளதுடன், தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடர் மே மாதம் 9ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் ஆசிய உள்ளக மெய்வல்லுநர் தொடர் கஸகஸ்தானில் நடைபெறவுள்ளதோடு, அதே மாதம் ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான தகுதிகாண் போட்டிகள் நடைபெறவுள்ளமையும் கவனிக்கத்தக்கது.

2022 மார்ச் முதலாம் திகதி முதல் 4 ஆம் திகதி வரை குவைத்தில் ஆசிய இளையோர் மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரும், மார்ச் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையில் உலக உள்ளக மெய்வல்லுநர் தொடர் செர்பியாவிலும் நடைபெறவுள்ளன. ஆசிய இளையோர் மெய்வல்லுநர் தொடர் ஜூன் மாதம் தென்கொரியாவிலும், உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடர் ஜூலை மாதம் அமெரிக்காவிலும், பொதுநலவாய விளையாட்டு விழா ஒகஸ்ட் மாதம் இங்கிலாந்திலும், ஆசிய விளையாட்டு விழா செப்டெம்பர் மாதம் சீனாவிலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல். போட்டிகளை நேரில் காண ரசிகர்களுக்கு அனுமதி அளிப்பு

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவிருக்கும் ஐ.பி.எல். ரி-20 கிரிக்கெட் தொடரின் போட்டிகளை நேரில் காண ரசிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் ஆரம்பமாகி நடைபெற்று வந்த ஐ.பி.எல். 2021 தொடர், கொரோனாத் தொற்றின் பாதிப்பு காரணமாக இடையில் ஒத்திவைக்கப்பட்டது.

இந்தத் தொடரின் மீதிப் போட்டிகள் வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகி ஒக்டோபர் 15 வரை ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ளன.

வரும் சனிக்கிழமை டுபாயில் நடைபெறவிருக்கும் சென்னை சூப்பர் கிங்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டியிலிருந்து நடைபெறவுள்ள போட்டிகளை நேரில் காண ரசிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனை ஐ.பி.எல். நிர்வாகம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

போட்டிகளுக்கான நுழைவுச் சீட்டுகளை www.iplt20.com மற்றும் Plati numList.net ஆகிய இணையத்தளங்கள் மூலம் பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நாட்டின் மனித உரிமைகள் தொடர்பில் ஆணையருக்கு தெளிவுபடுத்த வேண்டும்

## சிரேஷ்ட பேராசிரியர் பிரதீபா மஹானாம தெரிவிப்பு



இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் ஆணையாளரின் குற்றச்சாட்டுக்கள் நாட்டின் சுயாதீனம் மற்றும்மக்கள்ஆணைக்கு அழுத்தங்களைப் பிரயோகிப்பனவாகவே அமைந்திருக்கின்றன.

அத்துடன் மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் நாட்டுக்குள் மேற்கொள்ளப்படும்வேலைத் திட்டங்கள் தொடர்பில் ஆணையாளருக்கு எடுத்துக்கூறத் தவறிவருகின்றமையே இதற்குக் காரணமாகும் என பேராசிரியர் பிரதீபா மஹானாம தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் இலங்கை தொடர்பாக தெரிவித்திருந்த கருத்து தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# கட்டுநாயக்க, மத்தள விமான நிலையங்களுக்கு மின்னஞ்சல் தகவலால் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடு

தாக்குதல் ஒன்று நடத்தப்படலாம் என கிடைக்கப் பெற்றதாகக் கூறப்படும் தகவல் ஒன்றுக்கு அமைய, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தளை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் பாதுகாப்பு நேற்று திடீரென மேலதிக படையினர் கொண்டு பலப்படுத்தப்பட்டது.

பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு விமான நிலையத்துக்கு கிடைக்கப் பெற்றதாக கூறப்படும் மின்னஞ்சல் ஒன்றுக்கு அமைய இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன என அறிய முடிகின்றது.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவவிடம் வினவிய போது, அது தொடர்பான எந்தத் தகவலும் தன்னிடம் இல்லை எனவும், தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட விவகாரம் என்பதால் கிடைக்கும் அனைத்து தகவல்களும் ஊடகப் பேச்சாளருடன் பகிர்ந்துகொள்ளப்பட வாய்ப்பில்லை எனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் உறுதிப்படுத்தப்படாத தகவல் ஒன்றாக குறித்த தகவல் கிடைக்கப் பெற்றிருப்பினும், முன் கூட்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளின் நிமித்தம் இவ்வாறு விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த பாதுகாப்பு நடவடிக்கைகளில், விமானப்படையினர் மற்றும் விசேட பொலிஸ் குழுக்கள் இணைந்து ஈடுபட்டிருந்தன. இவ்வாறான நிலையில், இலங்கையில் ஐ.எஸ். ஐ.எஸ். மற்றும் தலிபான்களின் கொள் கைகளால் ஈர்க்கப்பட்ட குழுக்கள், நபர்கள் தமது நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பம் தொடர்பில் உடனடியாக அவதானம் செலுத்துமாறு பொலிஸ் பிரதானிகள், அவர்களின் கீழ் உள்ள உளவுப் பிரிவுகளுக்கு அறிவித்தல் விடுத்துள்ளார் எனவும் அறிய முடிகின்றது.



# அரசியல் கைதிகளை துப்பாக்கி முனையில் அச்சுறுத்திய அமைச்சரின் செயல் இராணுவ ஆட்சியின் வெளிப்பாடே!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் காட்டம்



தமிழ் அரசியல் கைதிகளுக்கு சிறையில் சென்று துப்பாக்கி முனையில் இராஜாங்க அமைச்சர் அச்சுறுத்திய விடயம் இலங்கையில் தற்போது இராணுவ ஆட்சி இடம்பெறுகிறது என்பதையே தெளிவாக காட்டுகிறது என இலங்கை தமிழரசுக் கட்சியின் ஊடக செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பட்டிருப்பு தொகுதி இலங்கைத் தமிழரசுக்கட்சித்தலைவருமானபா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

அநுராதபுர சிறைக்குள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த நடந்து கொண்ட விதம் தொடர்பில் மேலும் கூறுகையில் –

இதொரு பாரிய மனித உரிமை மீறல் மட்டுமல்ல மிருகத்தனமான நடத்தையுள்ளவர்களே அரசில் அமைச்சர்களாக உள்ளனர் என்பதை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. ஒரு பொறுப்பு வாய்ந்த அரசின் தலைவராக இருக்கக் கூடிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக இதுக்கான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளை விளையாட்டு பொம்மைகளாகவோ, காட்சிப்பொருளாகவோ நினைக்கக் கூடாது. அநுராதபுரம் சிறைச்சாலையில் இன்று இராஜாங்க அமைச்சரை இவ்வாறு நடந்து கொண்ட சம்பவம் நாளை இன்னுமொரு சிறைச்சாலையில் வேறு ஓர் அமைச்சரோ நாடாளுமன்ற உறுப்பினரோ மேற்கொள்ள மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் உண்டு.

சிறைச்சாலை என்பது பாதுகாப்பாகக் கைதிகளை வைத்துப் பாீபாிக்கும் ஓர் இடமாகும். அங்கே இவ்வாறு இராஜாங்க அமைச்சர் கைத்துப்பாக்கியுடன் உள்ளே விட்டமை மிகப்பெரிய தவறு என்பதை சிறைச்சாலை ஆணையாளரும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இனவாதமும் மிருகத்தனமும் கலந்துள்ள நாடு என்பதை மீண்டும் சர்வதேச சமூகம் இதனை புரிந்து கொள்ளவேண்டும் எனவும் மேலும் கூறினார்.

# கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து 11 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சுகம்

கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 11 ஆயிரத்து 605 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாகக் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 27 ஆயிரத்து 254 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 94 ஆயிரத்து 109 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 11 ஆயிரத்து 567 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# கொழும்பு, குருநாகல், இரத்தினபுரியில் கறுப்பு பூஞ்சை தொற்றாளர் கண்டறிவு

## விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தகவல்



கொவிட் தொற்றாளர்களுள் கறுப்பு பூஞ்சை நோய்க்கு உள்ளானவர்கள் கொழும்பு, குருநாகல் மற்றும் இரத்தினபுரி பகுதிகளில் இருந்து இனங்காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கறுப்பு பூஞ்சை என்பது சுற்றாடல் சார்ந்த நோயாகும். இது தொடர்பாக மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

முகத்தில் அல்லது உடலில் ஏதேனும் வித்தியாசமான பருக்கள் மற்றும் அடையாளங்கள் ஏற்படும் பட்சத்தில் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

# ஒரு தொகுதி ஸ்புட்னிக் வி ஊசிகளை இலங்கைக்கு வழங்குகிறது ரஷ்யா

ரஷ்யாவிடமிருந்து மேலும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகள் நாட்டுக்கு கிடைக்கப்பெறவுள்ளன என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் திங்கட்கிழமை இந்த தடுப்பூசிகள் நாட்டை வந்தடையவுள்ளன என அவர் தெரிவித்தார். இந்த தடுப்பூசிகள் இரண்டாவது டோஸாக மக்களுக்கு செலுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எமது மக்களை கவலைப்படுத்துகின்ற செயல்களை ஏற்றுக்கொள்ள முடியாது

## சிறைச்சாலை சம்பவம் உண்மையாயின் கண்டிக்கிறார் அங்கஜன்

அநுராதபுரம் சிறைச்சாலையில் இராஜாங்க அமைச்சர் மேற்கொண்டார் எனக் கூறப்படும் செயல் உண்மையெனில் அது கண்டிக்கப்பட வேண்டியதென யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று (புதன்கிழமை) மதியம் இடம்பெற்ற விசேட சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

தமது மக்களைக் கவலைப்படுத்துகின்ற செயல்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் குறித்த இராஜாங்க அமைச்சர் பதவி விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.09.2021இல் வெளியிடப்பெற்றது.